# சிறுவர்களும் வாலிபர்களும் இயேசுவுக்கு சேவை செய்வதில் மகிழ்ச்சி அடைகின்றனர்

### இயேசு-குழந்தைகள் பின்பற்ற வேண்டிய மாபெரும் முன்மாதிரியானவர்

குழந்தைகளின் வயதுக்கும் தற்போதைய தேவைகளுக்கும் ஏற்ற நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்க.

**ஆசிரியரின் ஜெபம்:** "கர்த்தாவே, எங்கும் எப்போதும் நீர் குழந்தைகளை நேசித்தீர். நாங்களும் உம்மைப் போலவே அவர்களிடம் பரிவும் இரக்கமும் உள்ளவர்களாய் இருந்து, அவர்களிடம் இருந்து கற்றுக் கொள்ள உதவுவீராக."

**குழந்தைகளின் ஜெபம்:** "அன்பான இயேசுவே, நீர் எங்களை நேசிப்பதனாலேயும், எங்களை அன்போடு எவ்வாறு நடத்துவது என்பதை மக்களுக்கு காட்டுவதனாலேயும் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். உமக்கு சேவை செய்யவும் நீர் கூறுவதைச் செய்யவும் எங்களுக்கு உதவும்."

"அவர்களை அணைத்துக் கொண்டு, அவர்கள் மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார்." (மாற்கு 10:16).

**ஒரு படம் வரையவும்:**

- குழந்தைகள், மகிழ்ச்சியாய் இருக்கும் ஒரு குழந்தையின் படத்தை வரையட்டும். இது இயேசு குழந்தைகள் மேல் பரிவாய் இருக்கிறார் என்பதைக் காட்டும்.
- பெரிய பிள்ளைகள் சிறுவர்களுக்கு உதவட்டும்.

படத்தைப் பெற்றோர்களுக்குக் காட்டி இயேசு சிறு குழந்தைகளை நேசித்தார் என்பதை விளக்கவும். இயேசு குழந்தைகள் மேல் எவ்வளவு பரிவுள்ளவராய் இருக்கிறார் என்பதை மாற்கு 10:13-16 ல் காண்க. இதை குழந்தைகளுக்கு வாசிக்கவோ பாராமல் கூறவோ செய்யலாம். முடியுமானால் ஒரு பெரிய பிள்ளை வாசிக்கட்டும் அல்லது கதையை கூறட்டும்.



**குழந்தைகளைக் கேட்க வேண்டியவை:**

- மக்கள் தங்கள் குழந்தைகளை ஏன் இயேசுவிடம் கொண்டு வருகிறார்கள்? (குழந்தைகளே பதில் அளிக்கட்டும்).
- சிறு குழந்தைகளை அப்புறமாக எடுத்துச் செல்ல கூறியது யார்?

- குழந்தைகளை அப்புறப்படுத்துவதைக் கண்ட இயேசு எவ்வாறு உணர்ந்தார்?
- குழந்தைகளைக் குறித்து இயேசு என்ன கூறினார்?
- இயேசுவை ஆராதிப்பதில் குழந்தைகளை வரவேற்பது எவ்வளவு முக்கியமானது?

**கல்வி-செயல்பாடு :** இயேசுவிடம் பிள்ளைகளை பெற்றோர்கள் கொண்டு வந்தபோது நிகழ்ந்தவைகளை திரும்பவும் உயிர்பெற வைக்கவும்.

**குழந்தைகள்:** இயேசுவின் சீஷர்களாக பாவனை செய்யவும்.

- பெற்றோர்கள் இயேசுவிடம் பிள்ளைகளைக் கொண்டு வருவதைத் தடுக்க என்ன காரணம் கூறுவீர்கள்? உதாரணமாக:
- “இயேசுவுக்கு நேரமில்லை.”
- “இந்தக் குழந்தைக்கு அவரது வார்த்தையைப் புரிந்துகொள்ளும் வயது கிடையாது.”
- “எங்களது பெரிய போதகருக்கு அவமரியாதை செய்கிறீர்கள்.”
- சீஷர்கள் செய்திருப்பார்கள் என்று குழந்தைகள் கருதும் விஷயங்களை சொல்லட்டும்.

**குழந்தைகள்:** நீங்கள் பெற்றோர் என்று எண்ணிக் கொள்ளுங்கள். இயேசுவிடம் குழந்தைகளைக் கொண்டு வந்ததற்கான காரணங்களைக் கூறவும்.

**குழந்தைகள் :** இப்போது உங்களை இயேசு ஏற்றுக் கொண்ட குழந்தைகளாக எண்ணவும். இயேசுவைப் பற்றி என்ன கூறுவீர்கள்?

இயேசுவினிடத்தில் வரும் குழந்தைகளைப் பற்றிய கதையை **நாடகமாக்குக.** (மாற்கு 10:13-16).

- ஆராதனையின் போது இந்த நாடகத்தைப் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டுக. சபைத் தலைவரோடு பேசி ஏற்பாடு செய்யவும்.
- சில பெரியவர்களும் சிறுவர்களோடு இணைந்து நடித்தால் இன்னும் வல்லமையோடு விளங்கும்.
- இதை ஆயத்தப்படுத்துவதில் பெரிய குழந்தைகள் சிறியவர்களுக்கு உதவட்டும்.
- பெரிய பிள்ளைகள் ஏற்க வேண்டிய வேடம்: பெற்றோர், கதை கூறுபவர், இயேசு.
- **சிறிய குழந்தைகள்:** சீஷர்கள், பிள்ளைகள்.

**பெற்றோர்:** (குழந்தைகளைக் கையைப் பிடித்து இயேசுவுக்கு நேராய் நடத்தல்) அவர் அறையின் ஒரு பக்கத்தில் அமர்ந்திருத்தல்) “வாங்க, நாம் இயேசுவைப் பார்ப்போம்.”

**கதை கூறுபவர்:** மாற்கு 10:13 ஐ வாசித்தல்.

**சீஷர்கள் :** (இயேசுவின் அருகில் நின்று கோபமாக, கல்வி செயல்பாடுகளில் (மேலே) சீஷர்கள் சொன்னதைச் சொல்லவும். சீஷர்கள் என்ன சொல்லி இருப்பார்கள் என்பதை கற்பனை செய்து பேசவும்).

**பெற்றோர்:** (கல்வி செயல்பாடுகளில் உள்ளது போல சீஷர்களோடு கோபமாக வாதிடுதல் உங்கள் சொந்த வார்த்தைகளை உபயோகிக்கவும்).

**இயேசு :** மாற்கு 10:14 ல் உள்ள இயேசுவின் வார்த்தைகளை வேகமாகப் பேசுதல்:

“சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருவதற்கு இடம் கொடுங்கள். அவர்களைத் தடை செய்யாதிருங்கள், தேவனுடைய இராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது.”

**சீஷர்கள்:** உங்கள் சொந்த வார்த்தையில் கீழ்வருவது போல் எதையாவது பேசலாம்.

"ஆண்டவரே உமக்கு நேரமே இல்லையே" "இந்த சிறு குழந்தைகளுக்காக உமது நேரத்தை ஒதுக்கலாமா?"

**இயேசு:** மாற்கு 10:15 ல் உள்ள இயேசுவின் வார்த்தைகளை மீண்டும் வேகமாகப் பேசவும்:

"எவனாகிலும் சிறு பிள்ளையைப் போல தேவனுடைய இராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவன் அதில் பிவேசிப்பதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (குழந்தைகளை அணைத்துக் கொள்ளுகிறார்).

**கதை கூறுபவர்:** மாற்கு 10:16 ஐ சத்தமாக வாசிக்கவும். பின், நாடகத்துக்கு உதவிய யாவருக்கும் நன்றி தெரிவிக்கவும்.

இந்த நாடகத்தை சிறுவர்கள் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால் மேலே மாற்கு 10:13-16 ஐ பற்றி கேட்ட கேள்விகளையோ தாங்கள் தயாரித்த கேள்விகளையோ கேட்கலாம். கவிதை மற்றும் மனன வசனத்தை கூறலாம்.

**சங்கீதம் :** சங். 127:1,2,4,5-6 வசனங்களை நான்கு சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும்

கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்கள் பிரயாசம் விருதா.

கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா.

பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம் கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்.

வாலவயதின் குமாரன் பலவான் கையில் உள்ள அம்புகளுக்கு ஒப்பாய் இருக்கிறார்கள். அவைகளால் தன் அம்பறாத் துணியை நிரப்பின புருஷன் பாக்கியவான்.

**பெரிய பிள்ளைகள்** கவிதை, பாடல், சிறுகதை எழுதலாம். பொருள்: பிள்ளைகளை நேசிக்கும் பெரியோர் (அல்லது) பெரிய பிள்ளைகள் சிறிய குழந்தைகளுக்கு உதவுதல்.

**மனன வசனம்:**

- பெரிய பிள்ளைகள் : மாற்கு 10:13-15.
- சிறிய பிள்ளைகள் : மாற்கு 10:14 ல் உள்ள இயேசுவின் வார்த்தைகளை மட்டும்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net